**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – இராமநாதபுரம் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான ஈப்பு ஓட்டுநர் திரு.கி.ரவிச்சந்திரன் என்பவரின் மகள் செல்வி.ர.காளீஸ்வரி இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை**

அரசாணை (4ப) எண்.14

நாள்:17.05.2021
பிலவ, வைகாசி 3,
திருவள்ளுவர் ஆண்டு–2052
படிக்கப்பட்டவை:

1. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை எண்.வி3/ 9145/2019 நாள்:08.05.2020.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.42042/ 2020/ டி3, நாள்:30.03.2021.

* * * * *

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஈப்பு ஓட்டுநராகப் பணிபுரிந்து 07.12.2018 அன்று காலமான திரு.கி.ரவிச்சந்திரன் என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான செல்வி.ர.காளீஸ்வரி என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் *11.05.2020* முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகள் செல்வி.ர.காளீஸ்வரி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 28.01.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 08.07.1997 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 21 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 21 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 22 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும்

திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி.ர.காளீஸ்வரி என்ப பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 11.05.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 27.04.2021 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.7799/ட்டி.1/2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.13874/ஜி1/2021, நாள்:11.05.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஹன்ஸ் ராஜ் வர்மா

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம்.

**நகல்:**

செல்வி.ர.காளீஸ்வரி, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**

மே.கு.க.எண்.வி3/9145/2019 நாள்: 01.07.2021

அரசாணை (4ப) எண் 14, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ3) துறை,

நாள்: 17.05.2021-நகல் சார்பு செய்யப்படுகிறது.

1/7/21

மாவட்ட ஆட்சியருக்காக
நேர்முக உதவியாளர் (வ)
இராமநாதபுரம்.

பெறுநர்:

திரு.ர.காளீஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம், திருவாடானை.(இரு நகல்களில் ஒன்றினை சார்பு செய்து மீள் அனுப்பும் பொருட்டு)

நகல்:-

வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ),
ஊராட்சி ஒன்றியம், திருவாடானை.

ந.க.அ/1962/2021 நாள் 7.
நகல் சார்பு செய்யப்படுகிறது

Block Development Officer (B.Pt)
Thiruvadanai.

6.7.21

2/2

பெறுநர்
R. காளீஸ்வரி
இளநிலை உதவியாளர்
ஊராட்சி ஒன்றியம்
திருவாடானை